DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **CC. NO.90/2024**
Preliminary Register
Sessions

Deposition of witness for Prosecution அ.சா.2

Defence

Court

Name : சரவணன்
Father/ Husband Name : சாமிநாதன்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :

Age :

2வது எதிரி ஆஜர். 1, 3 மற்றும் 4வது எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 07.08.2024.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தச்சவயலில் குடியிருந்து வருகிறேன். மெக்கானிக் வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி. எதிரிகளை தெரியும். கடந்த 08.08.2018ம் தேதி வேலை செய்துவிட்டு பின் வீட்டுக்கு மதியம் 01.00. 01.30 மணியளவில் அம்மாக்கன்னு மகால் அருகே பைக்கில் வரும்போது எதிரிகள் நடந்துவந்து மறித்தார்கள். என்னை அந்த மகனே இந்த மகனே என என்னை எதிரிகள் அசிங்கமாக திட்டினார்கள். கம்பால் இடது பக்க கண்ணம் மற்றும் நெற்றி பகுதியில் காலிலும் அடித்தார்கள். அப்போது எனது அப்பா சாட்சி சாமிநாதன் வ்நதார். அவர் வந்து விலக்கிவிட்டார். அவரையும் எதிரிகள் கம்பால் தாக்கினார்கள். அப்போது எனது செல்போனையும், எனது அப்பாவின் செல்போன் மற்றும் எனது அப்பாவின் ரூ.2000/- பணத்தையும் எதிரிகள் எடுத்து சென்றுவிட்டார்கள்.

2. பின்னர் நான் எனது மனைவியான அ.சா.1க்கு போன் மூலம் தகவல் சொன்னேன். அவர்கள் வந்து என்னையும், எனது அப்பாவையும் தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1, 2 மற்றும் 4வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. சம்பவ நடந்த இடமான அம்மாக்கன்னு மகாலிலிருந்து 01கி.மீ. தொலைவில் தான் என்னுடைய வீடும், எதிரிகள் வீடும் உள்ளது என்றால் சரிதான். நான் போலீசார் விசாரணையில் நான் பயணித்த இருசக்கர வாகனத்தின் பதிவு எண்ணையும், என்ன வகையான மாடல் வண்டி என சொல்லவில்லை என்றால் சரிதான். எங்களுக்கும் எதிரிகளுக்கும் சுமார் 10 வருடங்களுக்கு முன்பே மகளிர் ˙மன்றம் மற்றும் உள்ளாட்சி தேர்தல் சம்மந்தமாக பிரச்சனை உள்ளது என்றால் சரிதான்.

2. அம்மாக்கன்னு மகால் அருகே கடை உள்ளது என்றால் அப்போது கடை இல்லை. எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லப்படும் கம்பை நான் ˙கைப்பற்றவில்லை. போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்த அன்றே விசாரித்தார்கள். நான் போலீசார் விசாரணையில் எனது அப்பா சம்பவ இடத்திற்கு எப்படி வந்தார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. 08.08.2018ம் தேதி நான் தான் இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்துவிட்டு எதிரிகள் அடித்ததாக அவர்கள் மீத உள்ள முன்பகை காரணமாக பொய்யாக அ.சா.1 புகார் கொடுத்ததற்கு ஆதாரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும், எனது அப்பாவும் தன்னிச்யையாக சிகிச்சைக்கு வந்து சேர்ந்தோம் என்றால் சரியல்ல. என் மனைவி அழைத்து சென்றார். நான் சாப்பிடுவதற்காக எனது வீட்டிற்கு சென்ற பாதையான தேவகோட்டை - சருகணி ரோடு அகலமான பைபாஸ் ரோடு என்றால் சரியல்ல. எதிரிகளுடன் நான் பேசிக்கொள்ள மாட்டேன் என்பதால் எதிரிகள் வழி மறித்தார்கள் என்றும் உண்மையிலேயே மறைத்திருந்தால் நான் நிப்பாட்டிருக்க மாட்டேன் என்றால் சரியல்ல. மெக்கானிக் என்பதால் வாகனத்தை மிக தெளிவாக ஓட்டுவேன் என்றால் சரிதான். எதிரிகளின் பெயர்களை மருத்துவரிடம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன்.

4. மருத்துவரிடம் நான் 03.00 மணிக்கு சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் மருத்துவரிடம் என்னை மூன்று பேர்கள் அடித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் என்னை அடிக்கவில்லை என்றும், உண்மையிலேயே அடித்திருந்தால் எந்த எதிரி எந்த ஆயுத்தால் உடம்பில் எந்த பகுதியில் அடித்தார் என சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. எந்த எதிரி யாருடைய பணம் மற்றும் செல்போன் எடுத்துசென்றார்கள் என்று உண்மையிலேயே சம்பவம் நடந்திருந்தால் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. போலீசாரிடம் விசாரணையில் சொல்லியுள்ளேன்.

5. நான் சொன்னதுபோல் எந்தவொரு சம்பவமும் நடக்கவில்லை என்றும், எதிரிகள் என்னை அடிக்கவில்லை என்றும், செல்போனை பறிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**3எதிரி தரப்பில் 1, 2, 4 வது எதிரிகள் தரப்பில் செய்த குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக சொன்னதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**மறு விசாரணை :** இல்லை.

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.